# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 347 | 4 Pages | 9.7.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 347 | 4 பக்கங்கள் | 9.7.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## நாட்டுக்காக சாக தேவையில்லை வளர்ச்சிக்கு பணியாற்றுங்கள்: குஜராத் விழாவில் அமித்ஷா பேச்சு




அகமதாபாத், ஜூலை 9

ஒருவர் நாட்டுக்காக சாக தேவையில்லை என்றும் ஆனால் நாட்டின்வளர்ச்சிக்காகபணியாற்ற வேண்டும் என்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறியுள்ளார். குஜராத் மாநிலம், அகமதாபாத்தில்,கட்வாபட்டிதார் சமூகத்தின் அமீன் பிஜேகேபி வித்யார்த்தி பவன் ஹாஸ்டலை அமித் ஷா திறந்து வைத்து பேசுகையில்,'' குஜராத் மாநிலத்தின் வளர்ச்சியில் கட்வா பட்டிதார் சமூகத்தினரின் பங்களிப்பு முக்கியமானது. கட்வா பட்டிதார் கல்வி நிறுவனங்களில் பயின்ற மாணவர்கள்ஏராளமானோர்நாட்டின்பல்வேறுதுறைகளில்பணியாற்றி வருகின்றனர்.

நாட்டுக்காக ஒருவர் சாக தேவையில்லை. நாட்டின் வளர்ச்சிக்காக வாழ வேண்டும். நீங்கள் ஐஏஎஸ், ஐபிஎஸ், சார்ட்டட் அக்கவுன்டன்ட், டாக்டர் போன்ற படிப்புகளில் சிறந்து விளங்கலாம். ஆனால் நாட்டின் வளர்ச்சிக்காக பணியாற்ற வேண்டும்'' என்றார். குஜராத் முதல்வர் பூபேந்திர படேல்,'' மோடி முதல்வராக இருந்த போது அறிமுகப்படுத்திய பள்ளிகளில் மாணவர் சேர்க்கை மற்றும் பெண் கல்வி திட்டங்களால் குஜராத் மாநிலம் கல்வியில் சிறப்பான இடத்தை வகிக்கிறது'' என்றார்.

........................................

## கேரளாவில் மூளை தின்னும் அமீபா பரவல் நீர் நிலைகளின் சுகாதாரம் உறுதி செய்யப்பட வேண்டும்: உள்ளாட்சி அமைப்புகளுக்கு சுகாதாரத்துறை எச்சரிக்கை

சென்னை, ஜூலை 9

கேரளாவில் மூளையை தின்னும் அமீபாவால் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ள நிலையில் நீர்நிலைகளின் சுகாதாரம் உறுதி செய்யப்பட வேண்டும் என உள்ளாட்சி அமைப்புகளுக்கு சுகாதாரத்துறை அறிவுரை வழங்கியுள்ளது. இதுகுறித்து பொது சுகாதாரத்துறை இயக்குநர் செல்வவிநாயகம் அனைத்து மாவட்ட சுகாதார அதிகாரிகளுக்கு எழுதிய கடிதம்: முதன்மை அமீபிக் மெனிங்கோஎன்செபாலிடிஸ் (பிஏஎம்), என்பது யூகாரியோட் நெக்லேரியா ஃபோலேரி மூலம் மூளையில் ஏற்படும் அபாயகரமான தொற்று ஆகும்.

இதற்கு மூளைக்காய்ச்சல் போன்ற தலைவலி, காய்ச்சல், குமட்டல், வாந்தி, கடினமான கழுத்து, குழப்பம், பிரமைகள் மற்றும் வலிப்பு போன்ற அறிகுறிகள் தென்படும். கேரளாவில் இருந்து சமீபத்தில் பதிவாகும் வழக்குகளைக் கருத்தில் கொண்டு, இந்த இயக்குநரகத்திலிருந்து கண்டிப்பாகப் பின்பற்றுவதற்கு பின்வரும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன. தேங்கி நிற்கும், மாசுபட்ட அழுக்கு நீரில் பொதுமக்கள் குறிப்பாக குழந்தைகள் நீந்துவதற்கும், குளிப்பதற்கும் அனுமதிக்க கூடாது. சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் இதனை கண்டிப்பாக அறிவுறுத்த வேண்டும்.

தேங்கி நிற்கும் நீர்நிலைகள், குளங்கள், ஏரிகள் போன்றவற்றைச் சுற்றிலும் சுற்றுச்சூழல் சுகாதாரம் உறுதி செய்யப்பட வேண்டும். பொது சுகாதார வழிகாட்டுதல்படி நீச்சல் குளத்தின் சுகாதாரம் உறுதி செய்யப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட தனியார் அல்லது உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான நீச்சல் குளங்களில் போதுமான குளோரினேஷன் செய்யப்பட வேண்டும். இந்த சூழலில் உயிரினம் உயிர்வாழ முடியாது என்பதால், அதிக ஆபத்துள்ள பகுதிகளில் 2 பிபிஎம்க்கு மேல் குளோரின் அளவை சம்பந்தப்பட்ட உள்ளூர் சுகாதார அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும்.

உள்ளாட்சி அமைப்புகள் நீர்நிலைகளை சுத்தமாக வைத்திருக்கவும், நீர்நிலைகளில் நுழைவதை கட்டுப்படுத்தவும் அறிவுறுத்தப்பட வேண்டும். நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அறிகுறிகளின் அடிப்படையில் சந்தேகத்திற்கிடமான ஏதாவது நிகழ்வை கண்டறிய அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவப் பயிற்சியாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

........................................

## சரிந்த 6 மாடி கட்டிடம்! ஒருவர் பலி.. பலர் சிக்கியிருக்கலாம் என அச்சம்.. குஜராத்தில் ஷாக்

சூரத், ஜூலை 9

குஜராத்தின் சூரத் அருகே 6 மாடி கட்டிடம் இடிந்து விழுந்தது. கட்டிடம் இடிந்து விழுந்ததில் ஒருவர் பலியாகியுள்ளார். 15 பேர் காயம் அடைந்துள்ள நிலையில், பலர் கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. மீட்பு பணிகள் தற்பொது முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

குஜராத்தின் தொழில நகரம் என்று அழைக்கப்படும் சூரத் அருகே உள்ள சச்சின் பாலி என்ற கிராமம் உள்ளது. இப்பகுதியில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. இந்த நிலையில், அங்குள்ள ஒரு 6 மாடி கட்டிடம் இடிந்து விழுந்துள்ளது. அப்படியே சீட்டுக்கட்டு போல 6 மாடி கட்டிடம் தரைமட்டமானது. கட்டிடம் இடிந்து விழுந்த தகவல் உள்ளூர் போலீசாருக்கு தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக விரைந்து வந்த போலீசார் இடிபாடுகளை அகற்றும் பணியில் மீட்பு பணியினருடன் இணைந்து ஈடுபட்டுள்ளனர். இடிந்து விழுந்த கட்டிடத்தில் 5 முதல் 6 குடும்பம் வசித்து வந்தாக சொல்லப்படுகிறது. ஒருவர் பலியாகியுள்ளார். 15 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு இருக்கும் நிலையில், மேலும் பலர் இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

சம்பவ இடத்திற்கு காவல் துறை உயர் அதிகாரிகளும் துணை மேயர் நரேந்திர பாட்டீலும் முகாமிட்டு மீட்பு பணிகளை துரிதப்படுத்தியுள்ளனர். கட்டிடத்தில் ஏதேனும் விதி மீறல் இருந்தால் உரிய நடவடிக்கை எடுக்கபடும் என அதிகாரிகள் தெரிவித்தனர். கடந்த 2017 ஆம் ஆண்டு இந்த கட்டிடம் கட்டப்பட்டதாக முதல் கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

இந்த கட்டிடம் சேதமுற்று இருந்ததாகவும் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழைக்கு தாங்க முடியாமல் கட்டிடம் இடிந்து விழுந்து இருக்கலாம் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். சூரத் நகரின் காவல் ஆணையர் கூறுகையில், "இன்று மாலை 3 மணியளவில் கட்டிடம் இடிந்து விழுந்துள்ளது. கட்டிடத்தில் 30 பிளாட்கள் உள்ள நிலையில், 4 முதல் 5 பிளாட்களில் மட்டுமே மக்கள் வசித்து வந்துள்ளனர். பிற பிளாட்கள் அனைத்தும் காலியாக இருந்துள்ளது. 5 6 பேர் கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் என அஞ்சுகிறோம்" என்றார்.

# முதல்வர் ஸ்டாலினின் பயணம் திடீர் ரத்து அமைச்சர் இல்ல விழாவிற்கு செல்லவில்லை

சென்னை, ஜூலை 9

தமிழக முதல்வர் ஸ்டாலினின் பயணம் திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் ரகுபதி இல்ல திருமண வரவேற்பு விழாவில் கலந்து கொள்ள இன்று மாலை புதுக்கோட்டை மாவட்டத்திற்கு செல்ல திட்டமிட்டு இருந்தார் முதல்வர் ஸ்டாலின்.



புதுக்கோட்டை மாவட்டம் பொன்புதுப்பட்டியில்நடைபெறும் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி இல்லத் திருமண வரவேற்பு விழாவில் கலந்து கொள்வதற்காக தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் இன்று மாலை விமானம் மூலம் திருச்சி செல்ல இருந்தார்.

தமிழகசட்டத்துறைஅமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக செயலாளருமான எஸ். ரகுபதியின் பேரன் டாக்டர் எஸ். நாச்சியப்பன் ரகுபதி டாக்டர் பி.அழகம்மை திருமணம் புதுக்கோட்டையை அடுத்த புதுப்பட்டியில் இன்று காலை நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து திருமண வரவேற்பு விழா இன்று மாலை 6 மணி அளவில் புதுக்கோட்டை ஜெ.ஜெ கல்லூரி வளாகத்தில் நடைபெறுகிறது. இந்த நிகழ்வில் தமிழக முதல்வர் ஸ்டாலின் பங்கேற்க இருந்தார்.

திருச்சியில் இருந்து 6 மணிக்கு காரில் புறப்பட்டு 6.45 மணிக்கு புதுக்கோட்டை சென்று, ரகுபதி இல்ல திருமண விழாவில் பங்கேற்றுவிட்டு, பின்பு இன்று இரவு1.15மணியளவில்அங்கிருந்து புறப்பட்டு திருச்சி வந்து மீண்டும் சென்னை திரும்ப திட்டமிட்டிருந்தார்.

இந்தச் சூழலில் தமிழக முதல்வர் ஸ்டாலினின் பயணம் திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் ரகுபதி இல்ல திருமண வரவேற்பு விழாவில் அவர் கலந்து கொள்ளவில்லை எனத் தகவல் வெளியாகியுள்ளது.

# வேப்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு விசிக போராட்டம்

வேப்பூர், ஜூலை 09

கடலூர் மாவட்டம் வேப்பூர் அருகேயுள்ள என்.நாரையூர் கிராமத்தில் கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு சட்டமேதை அம்பேத்கரின் முழு உருவச்சிலை அமைத்துள்ளனர். இந்த தகவல் அறிந்த வேப்பூர் வட்டாட்சியர் மற்றும் போலீசார் அனுமதி இன்றி அம்பேத்கர் சிலை நிறுவப்பட்டு உள்ளதாக கூறி அன்று இரவே அம்பேத்கர் சிலையை அகற்றி உள்ளனர்.



சிலை வைக்கப்பட்டிருந்த பீடத்தையும் ஜேசிபி இயந்திரம் மூலம் இடித்து தள்ளி உள்ளனர் இதனை அறிந்த அப்பகுதியில் உள்ள பட்டியல் வகுப்பை சேர்ந்த மக்கள் பெரும் அதிர்ச்சி அடைந்தனர்.

மேலும் வேப்பூர் அருகில் உள்ள சிறுநெசலூர் கிராமத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் கொடி கம்பத்தினையும் இரவு அகற்றி உள்ளனர்.

அதேபோல் கடந்த சில நாட்களுக்கு முன்பு வேப்பூர் அருகே உள்ள மாளிகைமேடு கிராமத்தில் விநாயகர் கோயில் கட்டுவதற்காக விநாயகர் சிலை வைத்துள்ளனர். அந்த சிலையும் அனுமதி இன்றி வைக்கப்பட்டுள்ளதாக கூறிய வருவாய்த் துறையினர் விநாயகர் சிலையை பறிமுதல் செய்துள்ளனர்.

தொடர்ந்து அதிகாரிகள் பட்டியலின மக்களுக்கு எதிராக செயல்படுவதாககூறி விடுதலைச்சிறுத்தைகள் கட்சியினர் கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் வீர திராவிடமணி தலைமையில் சுமார் 300க்கும் மேற்பட்டோர் வேப்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் வேப்பூர் பகுதியில் பரபரப்பு நிலவி வருகிறது.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: திருப்பூர் மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற்றது

திருப்பூர், ஜூலை 9

மாவட்ட கலெக்டர் தா.கிறிஸ்துராஜ் தலைமை யில் திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.



ஒவ்வொரு வாரமும் திங்கள் கிழமைகளில் மாவட்ட ஆட்சியர் அலு வலகத்தில் நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அவை அனைத்தும் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய தீர்வு காணப்பட்டு வருகிறது.

அந்த வகையில், இன்றைய தினம் நடைபெ ற்ற மக்கள் குறைதீர்ப்பு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா மற்றும் முதியோர் உதவித்தொகை, புதிய குடும்ப அட்டை வேண்டியும், சாலை வசதி, குடிநீர் வசதி வேண்டியும் என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 474 மனுக்களை பெற்றுக் கொண்டதுடன் மனுதாரர்கள் முன்னிலையிலேயே விசாரனை செய்து அதன் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட கலெக்டர் தா.கிறிஸ்துராஜ் அறிவுறுத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து, மாவட்ட கலெக்டர் தா.கிறிஸ்துராஜ் உடுமலைப்பேட்டை வட்டம், கொசவம்பாளையம் ஊராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூய்மை பணியாளராக பணியாற்றிய ஆரான் என்பவர் இயற்கை மரணம் அடைந்ததை தொடர்ந்து, தாட்கோ சார்பில் தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரியத்தின் சார்பில் ஈமச்சடங்கிற்கான உதவித்தொகை ரூ.25,000த்திற்கான காசோலையினை வழங்கினார்கள்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) சாம்சாந்தகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (நிலம்) மலர், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் புஷ்பாதேவி, துணை ஆட்சியர்கள் மற்றும் அனைத்து அரசுத்துறைகளின் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# என்ஆர் காங். பாஜ கூட்டணியில் விரிசல் முற்றுகிறது: பாஜ எம்எல்ஏ கல்யாணசுந்தரம் பரபரப்பு பேட்டி

புதுச்சேரி, ஜூலை 9

புதுச்சேரியில் என்ஆர் காங்கிரஸ்பாஜ கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. நாடாளுமன்ற தேர்தலில் பாஜ சார்பில் போட்டியிட்ட அமைச்சர் நமச்சிவாயம்படுதோல்வி அடைந்ததால் தேஜ கூட்டணியில் புகைச்சல் ஏற்பட்டுள்ளது. முதல்வர் ரங்கசாமியின் மீதும் அவரது நிர்வாகத்தின் மீதும் மட்டுமின்றி மட்டுமின்றி பாஜ அமைச்சர்கள் மீதும் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ள பாஜ மற்றும் அதிருப்தி எம்எல்ஏக்கள், தொடர்ந்து தனி கோஷ்டியாக செயல்பட்டு வருகின்றனர். கடந்த 3ம்தேதி டெல்லி புறப்பட்டு சென்ற பாஜ எம்எல்ஏ கல்யாணசுந்தரம், ஜான்குமார், ரிச்சர்ட் ஜான்குமார், அங்காளன் உள்ளிட்ட 7 எம்எல்ஏக்கள், மத்திய அமைச்சர்கள் மட்டுமின்றி பாஜ தேசிய தலைவர் ஜே.பி. நட்டாவை சந்தித்து பேசினர்.

அப்போது முதல்வர் ரங்கசாமி கூட்டணி தர்மத்தை மீறிவிட்டதால் அவரது அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொள்வது அல்லது வெளியிலிருந்து ஆதரவு கொடுப்பது பற்றியும் பரிசீலிக்குமாறு வற்புறுத்தினர்.

இதற்கிடையே முதல்வர் ரங்கசாமி பாஜ மீது அதிருப்தியில் இருப்பதால் மாற்று கட்சிகளிடம் தூது அனுப்பி இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதனிடையே டெல்லிக்கு சென்று வந்த காலாப்பட்டு தொகுதி பாஜ எம்எல்ஏ கல்யாணசுந்தரம் பரபரப்பு பேட்டி அளித்துள்ளார். அவர் கூறியதாவது: நடந்து முடிந்த



நாடாளுமன்ற தேர்தலில் மிகப்பெரிய தோல்வியை அடைந்துள்ளோம். இதே நிலை நீடித்தால் 2026 சட்டமன்ற தேர்தலிலும் தோல்வியை சந்திக்க வேண்டி வரும். இதுகுறித்து எங்களது தலைவர் ஜேபி நட்டாஜியை டெல்லி சென்று பார்த்தோம். அவரிடம் புகார் கூறினோம்.

எனது காலாப்பட்டு தொகுதியில் ரங்கசாமி போட்டியிட்டாலும் நான் வெற்றிபெறுவேன். என்ஆர் காங்கிரஸ் கட்சியின் ஆதரவு எனக்கு தேவையில்லை. நான் கடந்த தேர்தலில் பாஜக வேட்பாளராக நின்றுதான் வெற்றிபெற்றேன். என்னை எதிர்த்து சுயேச்சை வேட்பாளரை கூட போட்டார்கள். அதையும் தாண்டிதான் நான் வெற்றிபெற்றேன்.

மாநில தலைவர் செல்வகணபதியுடன் ஆலோசித்து அவரது ஒப்புதல் பெற்றுதான் டெல்லி சென்று புகார் அளித்தோம். கூட்டணி தர்மத்தை முதல்வர்ரங்கசாமி கடைபிடிக்கவில்லை. வருகிற 8ம்தேதி டெல்லி சென்று அமித்ஷாவை சந்தித்து ரங்கசாமி மீது மீண்டும் புகார் தெரிவிப்போம் என்றார்.

# தமிழ்நாடு ப்ரீமியர் லீக் போட்டியின் மருத்துவ பங்குதாரராக காவேரி மருத்துவமனை இணைப்பு

சென்னை, ஜூலை 9

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் போட்டியின் அதிகாரப்பூர்வ மருத்துவ பங்குதாரராக காவேரி மருத்துவமனைஇணைந்துஉள்ளது. தமிழ்நாடு ப்ரீமியர் லீக், தமிழகத்தில் உள்ள கிரிக்கெட் ரசிகர்களாலும், வீரர்களாலும் எதிர்பார்க்கப்படும் கிரிக்கெட் போட்டித் தொடர்களுள் ஒன்றாக இருந்து வருகிறது. இந்த நிலையில், தமிழ்நாடு ப்ரீமியர் லீக் (TNPL) போட்டியின் மூன்றாவது ஆண்டாக அதிகாரப்பூர்வ மருத்துவ பங்குதாரராக காவேரி மருத்துவமனை இணைந்து உள்ளது.

இது தொடர்பாக காவேரி மருத்துவமனைகள் குழுமத்தின் இணை நிறுவனர் டாக்டர். அரவிந்தன் செல்வராஜ் கூறியதாவது:

ஒரு போட்டித்தொடர் முழுவதிலும் பங்கேற்கும் அனைத்து விளையாட்டு வீரர்கள், அதிகாரிகள் மற்றும் பிற பணியாளர்களுக்கு விரிவான மருத்துவ ஆதரவை காவேரி மருத்துவமனை வழங்க திட்டமிட்டுள்ளது.

இத்தொடர் இடம்பெறும் ஒவ்வொரு மைதானம் மற்றும் இடங்களில் காவேரி மருத்துவமனையின் மருத்துவப் பணியாளர்கள் குழு தங்கியிருந்து, அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும் சிகிச்சை வழங்கும்.

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் (TNPL), நமது மாநிலத்தில் தோன்றி, நாடெங்கிலும் புகழ் பெற்றிருக்கும் ஒருமிகச்சிறப்பானவிளையாட்டாகும். இளம் கிரிக்கெட் வீரர்கள், அவர்களது திறமையை உலகறியச் செய்வதற்கு சரியான வாய்ப்பை வழங்கும் ஒரு சிறந்த தளமாக இருந்து வருகிறது.

இந்த போட்டித் தொடர் முழுவதிலும் உடல்நலத்தோடு தங்களது திறமைகளை முழுமையாக வெளிப்படுத்தி சிறப்பாக விளையாட அவர்களுக்கு உதவ எமது மருத்துவமனைகளின் சேவை பயன்படுவது மகிழ்ச்சி அளிக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# இரட்டைமலை சீனிவாசன் வகுத்த பாதை இந்தியாவில் வெற்றி பெறும் நிலை வந்துள்ளது: செல்வப்பெருந்தகை புகழாரம்

சென்னை, ஜூலை 9

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை நேற்று வெளியிட்ட அறிக்கை: பட்டியலின மக்களின் உரிமைகளை பாதுகாக்க புரட்சிகரமான மாற்று சிந்தனைக்கு வித்திட்டவர் இரட்டைமலை சீனிவாசன். எந்த ஜாதி அடையாளத்தை வைத்து ஒடுக்கினார்களோ, அந்த அடையாளத்தை வைத்து வகுப்பு பிரதிநிதித்துவத்தை கோரவும், இடஒதுக்கீடு, வேலைவாய்ப்பு, ஆட்சி அதிகாரம் ஆகியவற்றில் சம பங்கு கோரவும், அந்த அடையாளங்களின் தேவை குறித்த பார்வையை வருங்கால தலைமுறையினருக்கு எடுத்துக் கூறவும் இரட்டைமலை சீனிவாசன் பிறந்தநாளில் சூளுரை ஏற்போம்.

அயோத்திதாசர், இரட்டைமலை சீனிவாசன், அம்பேத்கர் போன்றோர் எந்த நோக்கத்திற்காக



வாழ்ந்தார்களோ, அவர்கள் வகுத்த அந்த பாதை இந்தியாவில் வெற்றி பெறும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக தலித்சமுதாயத்தைசேர்ந்த மல்லிகார்ஜுன் கார்கேவும், தமிழகத்தில் நானும் தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பது இரட்டைமலை சீனிவாசன் பிறந்த நாளில் வழங்கப்பட்ட நினைவுப் பரிசாகும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மக்களுக்கு சேவையாற்றுவோரை கவுரவிக்கும் வகையில் விஜயகாந்த், ஜி.விஸ்வநாதன் உள்ளிட்ட 9 பேருக்கு விருது: எஸ்டிபிஐ கட்சி அறிவிப்பு

சென்னை, ஜூலை 9

எஸ்டிபிஐ கட்சியின் மாநில தலைவர் நெல்லை முபாரக் நேற்று வெளியிட்ட அறிக்கை: எஸ்டிபிஐ கட்சி சார்பாக, சமூகத்தில் பல்வேறு தளங்களில் மக்களுக்கு சேவையாற்றக்கூடிய சிறந்த ஆளுமைகளை கவுரவிக்கும் விதத்தில் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுமைகளுக்கு தலைவர்களின் பெயரில் தமிழ்ச்சுடர் விருதுகள் வழங்கி எஸ்டிபிஐ கட்சி கவுரவித்து வருகிறது. அதன்படி இந்த ஆண்டுக்கான (2024ம் ஆண்டு) தமிழ்ச்சுடர் விருதுகளை பெறும் ஆளுமைகளை தேர்ந்தெடுக்க விருது குழு அமைக்கப்பட்டது.

இந்த குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், சிறந்த ஆளுமைகளை எஸ்டிபிஐ கட்சி தமிழ்ச்சுடர் விருதுக்காக தேர்வு செய்துள்ளது. இதன்படி கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் விருதுதேமுதிக நிறுவனர் விஜயகாந்த், பெருந்தலைவர்காமராசர் விருதுவிஐடி



பல்கலைக்கழக வேந்தர் ஜி.விஸ்வநாதன், டாக்டர் அம்பேத்கர் விருது திரைப்பட இயக்குநர், எழுத்தாளர் மாரி செல்வராஜ், தந்தை பெரியார் விருதுசென்னை உயர்நீதிமன்றம் வழக்கறிஞர் ஜிம் ராஜ் மில்டன்.

கவிக்கோ விருது எழுத்தாளர், சமூக ஆர்வலர் அ.முத்துக்கிருஷ்ணன், சயீத் சாஹிப் விருது கோவை மத்திய மாவட்ட எஸ்டிபிஐ தலைவர் முஸ்தபா, பழனிபாபா விருதுதமிழக மக்கள் ஜனநாயக கட்சி தலைவர் கே.எம். சரீப்,

ஐயா நம்மாழ்வார் விருது இயற்கை விவசாய ஆர்வலர் சஜாத் அலி, அன்னை தெரசா விருது சமூக ஆர்வலர் பரீஹா சுமனுக்கு வழங்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த ஆளுமைகளுக்கு வரும் 13ம் தேதி சென்னை எழும்பூர் ஃஸ்பைஸ் மஹாலில் நடைபெறும் விருது வழங்கும் விழாவில் விருதுகள் வழங்கப்படும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# பல மாதங்களாக முடங்கி கிடந்த சோழிங்கநல்லூர், சிறுசேரி மெட்ரோ பணிகள் மீண்டும் தொடங்கின

சென்னை, ஜூலை 9

சென்னையில் 2 கட்ட மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் 116.1 கி.மீ. தொலைவிற்கு 3 வழித்தடங்களில் செயல்படுத்தப்படுகிறது. இதில் மாதவரம் முதல் சிறுசேரி சிப்காட் வரையிலான மூன்றாவது வழித்தடம் 45.4 கிலோ மீட்டர் தொலைவை கொண்டது. இந்த திட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு தனி ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டன. இந்த வழித்தடத்தில் பழைய மகாபலிபுரம் சாலையில், சோழிங்கநல்லூரில் இருந்து சிறுசேரி சிப்காட் வரையிலான ஒரு பகுதியில் மெட்ரோ ரயில் பணி, ஒப்பந்தப்புள்ளி வழங்குவதில் ஏற்பட்ட பிரச்னையால், பல மாதங்களாக முடங்கிக் கிடந்தது.

இந்நிலையில் கடந்த வாரம் பல இடங்களில் துளையிடும் கருவிகள் நிலைநிறுத்தப்பட்ட நிலையில், தொழிலாளர்கள்ஒருதுளையிடும் இயந்திரத்தைப் பயன்படுத்துவதைக் காண முடிந்தது. மே மாத இறுதியில் கட்டுமானப் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டதாகவும், பிரதான ஒப்பந்ததாரரின் துணை நிறுவனத்தை ரத்து செய்துவிட்டு புதிய துணை நிறுவனத்தை நியமித்ததால், இந்தப் பாதையில் பணி தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டதாக மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: பழைய மகாபலிபுரம் சாலையில் 20 கி.மீ தொலைவுக்கு உயர்மட்ட பாதைகள் அமைக்கப்படுகின்றன. இதில் சோழிங்கநல்லூரில் இருந்து சிறுசேரி சிப்காட் இடையேயான 10 கி.மீ. தூரத்திற்கு இரண்டாகப் பிரிக்கப்பட்டு தனி ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டன. பிரதான கட்டுமான ஒப்பந்ததாரர் அதன் சார்பாக பாதையை உருவாக்க வேண்டிய ஒரு நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை முடித்துவிட்டு, அதற்கு வேறு நிறுவனத்தை மறுசீரமைப்பு செய்ய வேண்டியிருந்ததால், 6 மாதங்களுக்கும் மேலாக பணிகள் முடங்கின.

நேரு நகரில் இருந்து சோழிங்கநல்லூர் வரை, வேறு ஒப்பந்ததாரருக்கு ஒதுக்கப்பட்ட பாதை அமைக்கும் பணி தற்போதும்ம்முரமாகநடந்து வருகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர். இந்நிலையில் அப்பகுதி மக்கள் மீதமுள்ள கட்டுமானப் பணிகள் எதுவும் நடைபெறவில்லை என்றும், அண்ணாசாலையில் முதற்கட்டபணிகள்முடங்கியது போல, பாதையை முடிப்பதில் தாமதம் ஏற்படக்கூடும் என்றும், பல ஆண்டுகளாக தடுப்புச் சாலைகள் வழியாக செல்ல வேண்டியிருக்கும் என்றும் அவர்கள் அஞ்சுகின்றனர்.

ஐடி வழித்தடத்திற்கு மாற்று போக்குவரத்து அமைப்பைக் கேட்டு அரசாங்கத்திடம் மனுக்கள் அளித்தோம். மெட்ரோ ரயில் பாதை இறுதியாக அறிவிக்கப்பட்டபோது நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம், ஒப்பந்தக்காரரின் தரமற்ற வேலை மெட்ரோ ரயில் நிறுவனம் மீது மோசமான அபிப்பிராயத்தை ஏற்படுத்தியுள்ளதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்தனர்.

# அன்புமணி கோரிக்கை ஆன்லைன் சூதாட்டத்திற்கு அரசு தடை பெற வேண்டும்

சென்னை, ஜூலை 9

பாமக தலைவர் அன்புமணி வெளியிட்டுள்ள அறிக்கை: சேலம் மாவட்டம் சின்னமணலியைச் சேர்ந்த அங்கமுத்து என்ற விசைத்தறி உரிமையாளர் ஆன்லைன்சூதாட்டத்தில் லட்சக்கணக்கில் பணத்தை இழந்து கடனாளி ஆனதால் ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாக தற்கொலை செய்து கொண்டிருப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

ஆன்லைன் சூதாட்ட தற்கொலைகளுக்கு முடிவு கட்டுவதற்கான ஒரே தீர்வு சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு உச்ச



நீதிமன்றத்தில் தடை பெறுவது தான் என்று தமிழக அரசை வலியுறுத்தி வருகிறேன். எனவே ஆன்லைன் சூதாட்டத்திற்கு தடை பெறுவதற்கு தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கூட்டுறவுகள் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குகின்றன என்ற கருத்தில் சர்வதேச கூட்டுறவு தினம் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு: அமைச்சர் பெரியகருப்பன் தகவல்

சென்னை, ஜூலை 9

கூட்டுறவுகள் அனைவருக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குகின்றன என்ற மைய கருத்தில் மக்களுக்கு சர்வதேச கூட்டுறவு தினத்தைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதையொட்டி ரத்ததான முகாம்கள், மரக்கன்றுகள் நடும் முகாம்கள் நடத்தப்பட்டன என்று அமைச்சர் பெரியகருப்பன் கூறினார்.

இதுகுறித்து கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் வெளியிட்ட அறிக்கையில்:

சர்வதேச கூட்டுறவு தினம் ஆண்டுதோறும் ஜூலை முதல் சனிக்கிழமை அன்று 1923ம்




ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு, கூட்டுறவுகள் அனைவருக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குகின்றன என்ற மைய கருத்தில் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் மூலம் சிறப்பு உறுப்பினர் கல்வி திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு, ஊரக பகுதிகளில் உள்ள மக்களுக்கு சர்வதேசகூட்டுறவு தினத்தைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதையொட்டி ரத்ததானம், மரக்கன்றுகள் நடும் முகாம்கள் நடத்தப்பட்டன. மேலும் கூட்டுறவு வளர்ச்சிகுறித்த பேச்சுப் போட்டிகள் மற்றும் ”உலக பொருளாதாரத்தில் கூட்டுறவின் ஈடுபாடு” என்ற தலைப்பில் கட்டுரை போட்டிகள் நடத்தப்பட்டன. கூட்டுறவு வங்கிகள், சங்கங்கள் மூலம் வழங்கப்படும் பல்வேறு கடன்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அனைத்து மாவட்ட கூட்டுறவு வங்கிகளில் “உறுப்பினர் சேர்க்கை முகாம்” மற்றும் “கடன் மேளாவும்” நடத்தப்பட்டன. தமிழ்நாட்டில் அனைத்து தரப்பு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தேவையான சேவைகளை கூட்டுறவு அமைப்புகள் சிறப்பாக செயல்படுத்தி வருகின்றன.

# பஞ்சாப், ம.பி மாணவர்கள் கீழடியை கண்டு பிரமிப்பு

திருப்புவனம், ஜூலை 9

மாநிலங்களுக்கு இடையேயான கலாசாரம், பழக்கவழக்கங்கள் குறித்து அறிந்து கொள்வதற்காக, பஞ்சாப் மற்றும் மத்தியப் பிரதேச மாணவ, மாணவிகள் 20 பேர் ஏழு நாள் பயணமாக தமிழகம் வந்துள்ளனர். நேற்று கீழடி வந்த அவர்கள் கீழடி திறந்த வெளி அருங்காட்சியகம், கீழடி அருங்காட்சியகம் உள்ளிட்டவற்றை நேரில் கண்டு ரசித்தனர். ஏழாம் கட்ட அகழாய்வில் கண்ட



றியப்பட்ட சிவப்பு நிற பானை, உறைகிணறுகள், சுடுமண் பானைகளை கண்டு ரசித்தனர்.

2,600 ஆண்டுகளுக்கு முன் தமிழ் மண்ணில் வாழ்ந்த மக்கள் நாகரிகம், கல்வியறிவு, விவசாயம், தொழில்நுட்பம், பொழுதுபோக்கு உள்ளிட்ட பல்வேறுஅம்சங்களில்சிறந்து விளங்கியதற்கான சான்று கிடைத்த இடத்தை நேரில் கண்டு வியந்தனர். பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்த மாணவர்கள் கூறுகையில், ‘‘ஹரப்பா, மொகஞ்சதாரோ போன்றவற்றை மிஞ்சும் வகையில் இங்கு மனிதர்கள் நாகரிகத்துடன் வாழ்ந்துள்ளனர். திறந்த வெளி அருங்காட்சியகத்தில் இதனை காணும் போது ஆச்சர்யமாக உள்ளது’’ என்றனர்.

# விலங்குகள் மூலம் பரவும் நோய்கள் குறித்து பொதுமக்கள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்: பொது சுகாதாரதுறை உத்தரவு

சென்னை, ஜூலை 9

தமிழகத்தில் விலங்குகள் மூலம் பரவும் நோய்கள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த அனைத்து மாவட்ட சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தி உள்ளது. இந்தியாவில் ரேபிஸ், புருசெல்லோசிஸ், சிஸ்டிசெர்கோசிஸ், ஜப்பானிய மூளைஅழற்சி, பிளேக், லெப்டோஸ்பிரோசிஸ், ஸ்க்ரப் டைபஸ், கேஎஃப்டி ஆகிய நோய்களால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். சமீபத்தில் ஏவியன் இன்ஃப்ளுயன்ஸா, நிபா, சிசிஎச்எப், எச்1என்1 உள்ளிட்ட நோய்கள் பரவி வருகிறது. எனவே இது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்த அனைத்து மாவட்ட சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தி உள்ளது. இது தொடர்பாக பொது சுகாதாரத்துறை அனுப்பிய சுற்றறிக்கை: விலங்குகள் மூலம் பரவும் நோய்கள் தடுப்பு தினம் ஜூலை 6ம் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது. எனவே அதுகுறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

குறிப்பாக அந்தந்த மாவட்டத்தில் உள்ள மருத்துவம், கால்நடை, வனவிலங்குகள் உள்ளிட்ட துறை அதிகாரிகளுடன் ஆலோசனைகூட்டம் நடத்தி நோய் பரவலை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உள்ளூர் கால்நடை துறைகள் மற்றும் மருத்துவ கிளினிக் உடன் இணைந்து விலங்குகளுக்கு தடுப்பூசி செலுத்த சிறப்பு முகாம் நடத்த வேண்டும். விலங்குகள் மூலம் பரவும் நோய்களை தடுக்க மருத்துவ கல்லூரிகள், வேளாண் கல்லூரிகளில் சிறப்பு நிகழ்ச்சி மற்றும் பயிற்சி பட்டறை நடத்த வேண்டும். உள்ளூர் விவசாயிகளுக்கும் நோய்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

# தொடரும் இலங்கை கடற்படை அட்டூழியம் ராமேஸ்வரம் மீனவர்கள் மீண்டும் விரட்டியடிப்பு: மண்டபம் மீனவர்களுக்கும் மிரட்டல்

ராமேஸ்வரம், ஜூலை9

மீன்பிடித்து கொண்டிருந்த ராமேஸ்வரம், மண்டபம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் விரட்டியடித்ததால் ஏமாற்றத்துடன் கரை திரும்பினர். ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தில் இருந்து நேற்று முன்தினம் காலை 400க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீன்பிடி அனுமதி டோக்கன் பெற்று மீனவர்கள் கடலுக்குச் சென்றனர். இவர்களில் ஒரு பகுதியினர் இரவில் மீன்பிடித்து கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினர் 3 பெரிய ரோந்து கப்பல்களில் அந்த பகுதிக்கு வந்தனர்.

அவர்கள் கப்பலின் மேலே பொருத்தப்பட்டிருந்த போஃகஸ் மின்விளக்கை ராமேஸ்வரம் மீனவர்களின் படகுகளை நோக்கி பாய்ச்சி அச்சுறுத்தினர். இதனால் பயந்து போன மீனவர்கள் அந்தப் பகுதியில் இருந்து நகர தொடங்கினர். இருப்பினும், இலங்கை கடற்படையினர் தொடர்ந்து அச்சுறுத்தி, இங்கு மீன் பிடிக்கக் கூடாது எனக் கூறி அங்கிருந்த 50க்கும் மேற்பட்ட விசைப்படகுகளை விரட்டியடித்தனர். இலங்கை கடற்படை தொடர் அச்சுறுத்தலால் 20க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மீன்பிடி பணியை கைவிட்டு நேற்று முன்தினம் இரவே கரை திரும்பி விட்டன.

அதே நேரத்தில் இலங்கை கடற்படை ரோந்து இல்லாத பகுதியில் மீன்பிடித்து நேற்று காலை கரை திரும்பிய மீனவர்களின் படகுகளிலும் மீன்பாடு குறைவாக இருந்தது. இதனால், நூற்றுக்கும் மேற்பட்ட படகுகளுக்கு கடுமையான நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இதேபோல, மண்டபம் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களையும் அச்சுறுத்தி விரட்டியடித்ததால், அவர்களும் மிகக்குறைந்த மீன்களுடன் கரை திரும்பினர். இலங்கை கடற்படையினர் கடந்த 15 நாட்களாக தொடர்ந்து மீனவர்களை கைதுசெய்வது, வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு எச்சரிப்பது, படகுகளை சிறைபிடிப்பது போன்ற அட்டூழியங்களை செய்து வருவதால் மீன்பிடிக்க முடியாமல் மண்டபம் பகுதி மீனவர்கள் பரிதவித்து வருகின்றனர்.

# புதுச்சேரிகடலூர் சாலையில் தடுப்பு கட்டையில் மோதி சென்னை பஸ் கவிழ்ந்தது: டிரைவர் பலி; 49 பேர் படுகாயம்



ரெட்டிச்சாவடி, ஜூலை9

சென்னையில் இருந்து வேதாரண்யம் சென்ற அரசு பஸ் தடுப்பு கட்டையில் மோதி கவிழ்ந்து டிரைவர் உயிரிழந்தார். கண்டக்டர் உள்பட 49 பேர் படுகாயமடைந்தனர். சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்தில் இருந்து வேதாரண்யத்துக்கு அரசு பஸ் ஒன்று நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் சென்றது. நாகை மாவட்டம் வேதாரண்யத்தை சேர்ந்த ராஜா (44) டிரைவராகவும், நாகப்பட்டினம் கிருஷ்ணமூர்த்தி (41) கண்டக்டராகவும் பணியில் இருந்தனர்.

புதுச்சேரிகடலூர் சாலையில் ரெட்டிச்சாவடி அடுத்த கரிக்கன் நகர் மலாட்டாறு பாலம் அருகே சென்ற போது திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையின் நடுவில் இருந்த தடுப்பு கட்டையில் மோதி பஸ் கவிழ்ந்தது. இதில் பஸ்சுக்கு அடியில் சிக்கி டிரைவர் ராஜா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். பேருந்தில் பயணம் செய்த திருவாரூர் லெனின் (45), சென்னை சுந்தரி (53), மணிகண்டன் (41), பசுபதி (41), வசந்த் (23), முருகன் (44), மாறன் (80), ராம் (30), கண்டக்டர்கிருஷ்ணமூர்த்தி உள்பட 49 பேர் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து ரெட்டிச்சாவடி போலீசார் சென்று விசாரணை நடத்தினர். பின்னர் கிரேன் உதவியுடன் பஸ்சை அப்புறப்படுத்தி போக்குவரத்தை சீர் செய்தனர். விபத்து காரணமாக புதுச்சேரிகடலூர் சாலையில் சுமார் 2 மணி நேரத்துக்கும் மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# ரூ.800 கோடி எங்க இருக்குனு தெரியாது; மூட்டை தூக்கி பிழைப்பேன்: சொல்கிறார் சரத்குமார்

விக்கிரவாண்டி, ஜூலை 9

விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் பாமக வேட்பாளரை ஆதரித்து பாஜக பிரமுகர் நடிகர் சரத்குமார் விக்கிரவாண்டி பேருந்து நிலையம் அருகே நேற்று பிரசாரம் செய்தார். அப்போது அவர்பேசுகையில், ‘முன்பு நடந்த தேர்தல்களில் அதிமுக, திமுக கட்சிகளுக்கு பிரசாரம் செய்த நான், காலத்தின் கட்டாயத்தால் வல்லரசு நாடாக இந்தியா முன்னேற்ற வேண்டும் என்பதால் எனது கட்சியை பாஜகவுடன் இணைத்தேன். தமிழகத்தில் பலரும் கட்சி நடத்தி வருகிறார்கள் பிறருக்கு துதிபாடும்நிலையில்தான் அவர்கள் உள்ளனர். தெருத்தெருவாக சைக்கிளில் பேப்பர் போட்டவன் நான். மக்களால் உயர்த்தப்பட்டவன் தான் இந்த சுப்ரீம் ஸ்டார் சரத்குமார். எனது மகள் திருமணத்திற்கு ரூ.800 கோடி செலவு செய்துவிட்டதாக கூறுகிறார்கள். அது எங்கு இருக்கிறது என்று எனக்கு தெரியாது. என்னை இப்போது விட்டால் கூட மூட்டை தூக்கி பிழைப்பேன், எனக்கு நல்ல பழக்க வழக்கங்கள் உள்ளதால் தான் இன்றும் திடமாக உள்ளேன், என்றார்.

# வெம்பக்கோட்டை அகழாய்வில் சுடுமண்ணாலான காளை உருவம் கண்டெடுப்பு



ஏழாயிரம்பண்ணை, ஜூலை 9

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை அருகே விஜயகரிசல்குளத்தில் 3ம் கட்ட அகழாய்வு பணி கடந்த மாதம் 18ம் தேதி தொடங்கி நடந்து வருகிறது. நேற்று முன்தினம் நடந்த அகழாய்வில் உடைந்த நிலையில் சுடுமண்ணாலான காளை பொம்மையின் உடல் பாகம், கருப்பு நிற சுடுமண் காதணி, அலங்கரிக்கப்பட்ட சுடுமண் மணி ஆகியவை கண்டெடுக்கப்பட்டன.

ஏற்கனவே நடந்த 2ம் கட்ட அகழாய்வு பணியின் போது, 10க்கும் மேற்பட்ட காளை உருவம் கண்டெடுக்கப்பட்டது. தற்போது மேலும் ஒரு காளை உருவம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு இங்கு வசித்த மக்கள் முக்கியத்துவம் கொடுத்துள்ளது உறுதி செய்யப்படுவதாக தொல்லியல் துறையினர்தெரிவித்தனர்.

# திண்டுக்கல் மாநகராட்சியில் வரி வசூல் தொகையில் ரூ.4.69 கோடி முறைகேடு: பெண் அதிகாரி உள்பட 2 பேர் சஸ்பெண்ட்

திண்டுக்கல், ஜூலை 9

திண்டுக்கல் மாநகராட்சி அலுவலகத்தில், வரிவசூல் செய்த பணத்தை வங்கியில் செலுத்தாமல் கையாடல் செய்ததாக, கடந்த சில தினங்களுக்கு முன்பு தகவல் வெளியானது. இது தொடர்பாக இளநிலை உதவியாளர்சரவணன்சஸ்பெண்ட் செய்யப்பட்டார். இதனை கண்காணிக்க தவறிய கண்காணிப்பாளர் சாந்திக்கு கடந்த 5ம் தேதி விளக்கம் கேட்டு மெமோ கொடுக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து கணக்குகளை தணிக்கை செய்தபோது, சுமார் 4 கோடியே 69 லட்சம் ரூபாய் வரை முறைகேடுகள் நடந்திருப்பது தெரியவந்தது. இது தொடர்பாக திண்டுக்கல் மாவட்ட போலீஸ் அலுவலகத்தில் மாநகராட்சி நிர்வாகம் தரப்பில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. இந்த முறைகேடு தொடர்பாக கண்காணிப்பாளர் சாந்தி மற்றும் இளநிலை உதவியாளர் சதீஷ் ஆகியோரை சஸ்பெண்ட் செய்து, ஆணையர் ரவிச்சந்திரன் உத்தரவிட்டார்.

# மாஞ்சோலை தொழிலாளர்களுக்கு நிலங்களை பகிர்ந்து அளிக்க வேண்டும்: கிருஷ்ணசாமி கோரிக்கை



நெல்லை, ஜூலை 9

மாஞ்சோலை தொழிலாளர்களுக்கு நிலங்களை பகிர்ந்தளிக்க வேண்டும் என்று கிருஷ்ணசாமி தெரிவித்து உள்ளார்.புதிய தமிழகம் கட்சியின் நிறுவன தலைவர் கிருஷ்ணசாமி நெல்லையில் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: மாஞ்சோலை பகுதியில் வசிக்கும் மக்களுக்கு அங்கு வசிப்பிடம் கொடுக்க வேண்டும் என சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அந்த வழக்கில் நான் நேரடியாக ஆஜராக உள்ளேன். பிபிடிசி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் முடிந்த பின்னர் தேயிலைத் தோட்டம் நேரடியாக அரசு கட்டுப்பாட்டில்வந்துவிடும்.தேயிலை தோட்டங்களை அரசு கையகப்படுத்தி அங்கு வசிக்கும் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கலாம். தமிழகத்தின் செல்வங்கள் மாஞ்சோலை தேயிலை தோட்டங்கள் என்பதை அரசு மறக்கக்கூடாது.

இந்தியாவில் அசாம், ஜார்கண்ட் உள்ளிட்ட பல மாநில மக்களுக்கு நிலம் பகிர்ந்தளிப்பு செய்ததை போல் மாஞ்சோலை தொழிலாளர்களுக்கும் நிலம் கொடுத்தால் பிரச்னை முடிந்து விடும். காரையாறு பகுதியில் வசிக்கும் மக்களுக்குஐந்து ஏக்கர் முதல் 10 ஏக்கர் வரை நிலம் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது. மாஞ்சோலை விவகாரத்தில் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் மனநிலையை உணர்ந்து கலெக்டர் நல்ல அறிக்கையை அரசுக்கு வழங்கினால் அரசு நல்ல நடவடிக்கையை எடுக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# வார விடுமுறையையொட்டி ஏற்காடு, ஒகேனக்கல்லில் குவிந்த சுற்றுலா பயணிகள்



ஏற்காடு, ஜூலை 9

வார விடுமுறையையொட்டி ஏற்காடு, ஒகேனக்கல், மேட்டூர், பூலாம்பட்டியில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர். இவர்கள் படகு, பரிசல் சவாரி செய்து மகிழ்ந்தனர். வார விடுமுறை தினமான இன்று (ஞாயிறு), சேலம் மாவட்டம் ஏற்காட்டுக்கு தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்தனர். இவர்கள் ஏரியில் படகு சவாரி செய்து மகிழ்ச்சியடைந்தனர். அண்ணா பூங்கா, தாவரவியல் பூங்கா, கிளியூர் நீர் வீழ்ச்சி, மான் பூங்கா, லேடீஸ் சீட், ஜென்ட்ஸ் சீட் உள்ளிட்ட இடங்களுக்கு சென்று சுற்றி பார்த்தனர். பயணிகள் வருகை அதிகரித்ததால், சாலையோர கடைகளில் வியாபாரம் களைகட்டியது. அங்குள்ள ரிசார்ட், ஓட்டல்கள் நிரம்பின. ரவுண்டானா பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதேபோல், இடைப்பாடி அருகே உள்ள பூலாம்பட்டியில் திரண்ட சுற்றுலா பயணிகள், அங்குள்ள கடைகளில் மீன்களை ஆர்வத்துடன்வாங்கிசாப்பிட்டனர். பின்னர் அவர்கள் விசைபடகில்படகுசவாரிசெய்து, இயற்கை காட்சிகளை கண்டு ரசித்தனர். மேட்டூர் அணை பூங்காவில் திரளான சுற்றுலா பயணிகள் குவிந்தனர். இவர்கள் அணை பூங்காவில் விளையாடினர். மீன்காட்சி சாலை, பாம்பு, முயல், மான் பண்ணைகளை பார்த்து ரசித்தனர். தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு இன்று காலை முதலே ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்த வண்ணம் இருந்தனர். இவர்கள் மெயின் அருவி, சினி அருவி, காவிரி ஆற்று பகுதிகளில் மசாஜ் செய்து, எண்ணெய் தேய்த்து குளித்து மகிழ்ந்தனர். மீன் உணவுகளை வாங்கி சாப்பிட்டனர். பரிசல் சவாரி செய்து காவிரியின் அழகை கண்டு ரசித்தனர்.

# நிர்வாண சாதுக்கள் ஆன்மிக நடைபயணம்




ஒசூர், ஜூலை 9

கர்நாடகா மாநிலம் பெல்காம் பகுதியிலுள்ள மடத்திலிருந்து ஆச்சாரியர் சூர்யசாகர் முனிமகராஜ், ததீத் சாகர் முனிமகராஜ் ஆகியோர் நிர்வாணஆன்மிக நடைபயணமாக நேற்று முன்தினம் புறப்பட்டு நேற்று காலை பெங்களூரு வழியாக நேற்று மதியம் ஒசூரை வந்தடைந்தனர். அத்திப்பள்ளி எல்லையில்இருந்துதமிழகபோலீசார் சாதுக்களுக்கு பாதுகாப்பாக வந்தனர். வழிநெடுகிலும் பொதுமக்கள் ஏராளமானோர், அவர்களிடம் ஆசி பெற்றனர். தொடர்ந்து கிருஷ்ணகிரிக்கு நடைபயணம் மேற்கொண்ட சாதுக்கள், திருவண்ணாமலை வழியாக வந்தவாசியை அடைகின்றனர். அங்கிருந்து திருமலை மடத்திற்கு செல்கின்றனர்.

# ஓபிஎஸ் ஒரு சுயநலவாதி ; விசுவாசமாக இருந்ததாக வரலாறே கிடையாது அண்ணாமலை ஒரு பச்சோந்தி துரோகத்தின் மொத்த உருவம்: எடப்பாடி பழனிசாமி கொந்தளிப்பு



மதுரை, ஜூலை 9

அண்ணாமலை ஒரு பச்சோந்தி. துரோகத்தின் மொத்த உருவமே அண்ணாமலை தான் என்று மதுரையில் எடப்பாடி பழனிசாமி ஆக்ரோஷத்துடன் தெரிவித்தார். அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில்நடந்தகட்சிநிர்வாகி இல்ல விழாவில் நேற்று பங்கேற்றார். நிகழ்ச்சி முடிந்து சென்னை செல்ல நேற்று மாலை மதுரை விமானநிலையம் வந்த எடப்பாடி பழனிசாமி நிருபர்களிடம் கூறியதாவது: சமீபகாலமாக பல்வேறு கட்சித் தலைவர்கள் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

விக்கிரவாண்டி இடைத் தேர்தலை புறக்கணித்ததை பொறுத்தவரை எங்கள் தலைமை முடிவு தான். ஜெயலலிதா இருக்கும்போது 5 இடைத் தேர்தல்களைப் புறக்கணித்துள்ளோம். அதிமுகவை இணைப்பதாக ஓபிஎஸ் கூறலாம். ஆனால் எங்கள் தலைமை அதற்கு உடன்படாது. பொதுக்குழு கூட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அவரைஅடிப்படை உறுப்பினர்பொறுப்பில்இருந்து நீக்கிவிட்டோம். அவர் அதிமுகவிற்கு உண்மையாக, விசுவாசமாக இருந்ததாக வரலாறு இல்லை. ஜெயலலிதா முதன்முதலாகசட்டமன்ற பொதுத்தேர்தலை சந்திக்கிறபோது, போடிநாயக்கனூரில் போட்டியிடுகிறார்.

திரையுலகைச் சேர்ந்த வெண்ணிற ஆடை நிர்மலாவை எதிர்த்து போட்டியிடுகிறார். அந்த வெண்ணிறஆடைநிர்மலாவிற்கு சீப் ஏஜென்டாக இருந்தவர்தான் ஓபிஎஸ். அப்பொழுதே ஜெயலலிதாவிடம் விசுவாசமாக இல்லை. சிலருடைய சிபாரிசால்தான் அவர் உள்ளே நுழைந்தார்.

நாங்கள் ஒன்றாக இருந்தபோது பல கோரிக்கைகளை வைத்தார்.

ஜெயலலிதா மரணத்தில் மர்மம் இருப்பதாகச் சொன்னார்.

யாரை சுட்டிக்காட்டி சொன்னார்என்பது அனைவருக்கும் தெரியும். நாங்கள் அதற்கு ஆணையம் வைத்து விசாரித்தோம்.

விசாரணை ஆணையம் அமைக்க என்னை நிர்பந்தப்படுத்தினார். சட்டமன்றத் தேர்தலில் ஒருங்கிணைப்பாளர் பதவி வேண்டும் என்று கேட்டார். 97 சதவீதம் பேர் அப்போது எங்களுக்கு ஆதரவாக இருந்தாலும் கூடமூத்தநிர்வாகிகளிடம் கேட்டு ஒருங்கிணைப்பாளர் பதவி கொடுத்தோம். 2019ல் தேனியில் அவர் மகன் போட்டியிட்ட போது,

அங்கு மட்டும்தான் வேலை பார்த்தார். மற்ற தொகுதிகளில் வேலை செய்யவில்லை. கட்சியை பற்றி கவலைப்படாமல் மகனைப் பற்றி மட்டுமே கவலைப் பட்டார்.

ஒற்றைதலைமைவேண்டும் என்கிறபோது அனைவரும் ஒருமித்த கருத்தோடு இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். முதற்கட்ட பேச்சுவார்த்தை நடத்தியதற்கு அவர் ஒத்துக் கொள்ளவே இல்லை. அதன் பிறகு தான் அவர் நீதிமன்றம் சென்றார். பொதுக்குழுவைகூட்டிநடவடிக்கை எடுத்தற்காக ரவுடிகளை வைத்து கட்சியினரை தாக்கி, தலைமை அலுவலகத்தில் கதவுகளை உடைத்து, உள்ளிருந்த பொருட்களை சூறையாடி, திருடி சென்றனர். தொண்டர்கள் பலர் இவரால்தாக்கப்பட்டுசிகிச்சை பெற்றனர்.

இரட்டை இலையை முடக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்தில் வழக்கு தொடர்ந்தார். நாடாளுமன்றத் தேர்தல் நேரத்திலாவது கட்சிக்கு இணக்கமாக இருப்பார் என்று பார்த்தால், ராமநாதபுரத்தில் எங்கள் வேட்பாளரை எதிர்த்து,

இரட்டை இலையை எதிர்த்து போட்டியிட்டார். பணத்தால் வாக்குகளை பெற்றார். இவர் எப்படி விசுவாசமாக இருப்பார்? இவர் விசுவாசமாக இருந்ததாகவரலாறு இல்லை. அவர் ஒரு சுயநலவாதி. அதிமுகவில் அவர் இணைய ஒரு சதவீதமும் வாய்ப்பில்லை.

அண்ணாமலை ஒரு பச்சோந்தி. சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப பச்சோந்தி போல பேசக்கூடியவர். என்னை அவர் துரோகி என்று கூறியுள்ளார். நான் துரோகி அல்ல, துரோகத்தின் மொத்த உருவமே அண்ணாமலை தான். மோடி அருகில் அமர்ந்ததற்கே அண்ணாமலைக்கு கோபம் வருகிறது. எங்கள் தலைவர்களை கீழ்த்தரமாக, அவதூறாக விமர்சித்தால் நாங்கள் எப்படி பொறுத்துக் கொள்வோம்? எங்களை ஆளாக்கிய தலைவர்களை பற்றி பேசினால் எங்களுக்கு எப்படி உள்ளக் குமுறல் வரும்?

அண்ணாமலை கட்சித் தலைவர் பதவிக்கு பொருத்தமில்லாதவர். நாங்கள் அவரைப் போல் அப்பாயின்ட்மென்டில் வரவில்லை. 50 ஆண்டுகளாக கட்சியில் படிப்படியாக உழைத்து, அமைச்சர்,

முதலமைச்சர் என்று உயர்ந்தவன் நான். நான் தொண்டர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவன். அவர் அப்படி அல்ல, அவர்நியமிக்கப்பட்டவர். இன்று இருப்பார், அடுத்த வருடம் இருப்பாரா என்று தெரியாது. கண்ணாடியில் அவர் முகத்தை பார்த்து அவரைத்தெரிந்துகொள்ள வேண்டும். இவ்வாறு தெரிவித்தார்.

★ படிப்படியாக பூரண மதுவிலக்கு

எடப்பாடி பழனிசாமி கூறுகையில், ‘பிராந்தி குடித்தாலும் போதை தான். கள்ளு குடித்தாலும் போதை தான். சாராயம் குடித்தாலும் போதை தான். படிப்படியாகத்தான் மது விலக்கை அமல்படுத்தலாம். மதுவிற்கு பழக்கமானவர்கள் உடனடியாக நிறுத்த முடியாது என்பது எனக்கு வந்த தகவல். எனவே படிப்படியாக குறைத்துத்தான்பூரண மது விலக்கை அமல்படுத்த முடியும்’ என்றார்.

# வாகனத்தில் இருந்து பறந்து வந்து சாலை முழுவதும் சிதறிய 500 ரூபாய் நோட்டுகள்: போட்டி போட்டு அள்ளிய பொதுமக்கள்

உசிலம்பட்டி, ஜூலை 9

வாகனத்தில் இருந்து சிதறி சாலை முழுவதும் விழுந்த ரூ.3 லட்சத்திற்கும் அதிகமான 500 ரூபாய் நோட்டுகளை பொதுமக்கள் போட்டி போட்டு அள்ளிச் சென்றனர்.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி, தேனி ரோட்டில் உள்ள மாமரத்துபட்டி விலக்கு பகுதியில் தேனியில் இருந்து நேற்றுமுன்தினம் காலை மதுரைக்கு வாகனம் ஒன்று சென்று கொண்டிருந்தது. இந்த வாகனத்தில் இருந்து திடீரென 500 ரூபாய் நோட்டுகள் சிதறி பறந்து நெடுஞ்சாலையில் விழுந்தது.

பறந்து வந்து விழுந்த 500 ரூபாய் நோட்டுகள், சுமார்100 மீட்டர்தொலைவிற்கு சாலை முழுவதும் சிதறிக் கிடந்தன.

இதனைக் கண்ட அப்பகுதி வழியாக சென்றவர்கள், வாகன ஓட்டிகள், பொதுமக்கள் என பலரும் போட்டி போட்டு பாய்ந்து சென்று ரூபாய் நோட்டுக்களை அள்ளிச் சென்றனர். இந்நிகழ்வு குறித்த சிசிடிவி காட்சிகள் நேற்று முன்தினம் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வாகனத்தில் இருந்து சிதறி ரோட்டில் விழுந்து மக்கள் எடுத்துச் சென்ற 500 ரூபாய் நோட்டுகள் ரூ.3 லட்சத்திற்கும் அதிகம் இருக்கலாம் எனகூறப்படுகிறது.

அவ்வழியாக வந்த டூவீலரில் இருந்தோ, பஸ்சில் இருந்தோ இந்த பணம் வீசப்பட்டதா அல்லது வேறு யாரும் திருடிச் செல்லும்போது, பிடிபடலாம் என்பதால் வீசி விட்டு தப்பிச் சென்றனரா என்பது குறித்து அப்பகுதியில் உள்ள சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் உசிலம்பட்டி நகர் காவல் நிலைய போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும்,

இந்த பணம் யாருக்கு சொந்தமானது, சிதறிய பணத்தை யார் யாரெல்லாம் எடுத்துச் சென்றனர் என்ற பட்டியலையும் போலீசார் தயாரித்து வருகின்றனர்.

# ஒரு நபருக்கு எத்தனை மதுபான பாட்டில் விதிமுறைகள் உருவாக்க வலியுறுத்தி ஜூலை 16ம் தேதி ஆர்ப்பாட்டம்: டாஸ்மாக் பணியாளர் சங்கம் அறிவிப்பு




சென்ன, ஜூலை 9

ஒரு நபருக்கு எத்தனை மதுபானபாட்டில்கள் விற்பனை செய்ய வேண்டும் என்பது உள்பட பல்வேறு விதிமுறைகள் உருவாக்க வலியுறுத்தி ஜூலை 16ம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என டாஸ்மாக் பணியாளர் சங்கம் அறிவித்துள்ளது. இதுகுறித்து தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர் சங்கம் (ஏஐடியுசி) வெளியிட்ட அறிக்கை: ஒரு நபருக்கு எத்தனை மதுபானபாட்டில்கள் விற்பனை செய்ய வேண்டும் என்று விதிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். பல்க் ஆர்டர் பேரில் மதுபானங்கள் வாங்குவோர் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, குறிப்பிட்ட மதுக்கடையில் பெற்றுக் கொள்ள எழுத்துப்பூர்வமான உத்தரவு வழங்கும் முறை அறிமுகம் செய்ய வேண்டும்.

இதுபோன்ற விதிமுறைகள் உருவாக்கப்படும் போது டாஸ்மாக் பணியாளர்சங்கப்பிரதிநிதிகளிடம் கருத்துக் கேட்டு இறுதி செய்ய வேண்டும். இந்த கோரிக்கைகள் மீது அரசின்கவனத்தை ஈர்க்கும் வகையில் வரும் ஜூலை 16ம் தேதி காலை 11 மணிக்கு டாஸ்மாக் தலைமை நிர்வாக அலுவலகத்தில் இருந்து தலைமைச் செயலகம் நோக்கி சென்று, முதல்வரிடம் முறையீடுகளை முன் வைப்பது என்று சங்கம் முடிவு எடுத்துள்ளது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
9.7.2024

## ஒரு பாட்டில் எண்ணெயை தபு தலையில் ஊற்றிய பிரியதர்ஷன்



கடந்த 1997ல் பிரியதர்ஷன் இயக்கத்தில் இந்தியில் வெளியான படம், 'விராசத்'. அனில் கபூர், தபு, பூஜா பத்ரா நடித்தனர். படத்தின் கதைப்படி சேலை அணிந்து, தலைமுடிக்கு எண்ணெய் தடவி ஜடை போட்டிருக்கும் கிராமத்து பெண் கேரக்டரில் தபு நடித்தார். அப்போது படப்பிடிப்பில் நடந்த ஒரு சம்பவம் குறித்து இப்போது பேசியுள்ளார். அவரது பேட்டி, இணையதளங்களில் வைரலாகியுள்ளது. தபு கூறியதாவது: எனது தலைமுடியில் நிறைய எண்ணெய் தடவி, கிராமத்து பெண் தோற்றத்தில் இருக்க வேண்டும் என்று பிரியதர்ஷன் சார் சொன்னார். உடனே எனது ஹேர் ஸ்டைலிஸ்ட், 'அதெல்லாம் எதுவும் வேண்டாம் மேடம். லேசாக ஜெல் போட்டால், எண்ணெய் தடவிய மாதிரி தெரியும்' என்றார். அவர் சொன்னபடியே நானும் தலையில் ஜெல் போட்டுக்கொண்டு சென்றேன்.

என்னைப் பார்த்து கோபப்பட்ட பிரியதர்ஷன் சார், 'உங்கள் தலைமுடியில் எண்ணெய் தடவிக் கொண்டு வரச்சொன்னேன். அது உங்களுக்குப் புரியவில்லையா?' என்று கேட்டார். உடனே நான், 'ஆமாம், தலைமுடியில் எண்ணெய் தடவியுள்ளேன், பாருங்கள்' என்றேன். ஆனால், அதற்குப் பிறகு அவர் எதுவும் பேசாமல் சென்றுவிட்டார். எனக்கு எதுவும் புரியவில்லை. பிறகு அவர் எனக்குப் பின்னால் வந்து நின்று, ஒரு பாட்டிலுள்ள எண்ணெய் முழுவதையும் அப்படியே என் தலையில் ஊற்றினார். நான் அதிர்ச்சி அடைந்து நின்றேன்.

உடனே அவர், 'இதற்கு பெயர்தான், தலைமுடியில் எண்ணெய் வைப்பது என்பது. எனக்கு இந்த லுக்தான் வேண்டும்' என்றார். அந்த லுக் என்றாலும் கூட, நான் ரெடியாக அதிக நேரமாகவில்லை. உடனே தலைமுடியில் எண்ணெய் தடவிக்கொண்டு, ஜடை போட்டுக்கொண்டு, ஐந்தே நிமிடங்களில் கிராமத்து பெண்ணா நடிப்பதற்கு தயாராகி விட்டேன்.

## 'மாடர்ன்ஸ் மாஸ்டர்ஸ்' என்ற பெயரில் எஸ்.எஸ்.ராஜமவுலி பற்றிய ஆவணப்படம்



திரைக்கு வந்த 'ஸ்டூடண்ட் நம்பர் 1', 'சிம்ஹாத்ரி', 'சை', 'சத்ரபதி', 'விக்ரமார்குடு', 'யமதொங்கா', 'மஹதீரா', 'மரியாத ராமண்ணா', 'ஈகா', 'பாகுபலி 1', 'பாகுபலி 2', 'ஆர்ஆர்ஆர்' ஆகிய வெற்றிப் படங்களை இயக்கியவர், எஸ்.எஸ்.ராஜமவுலி (50). அவரது படங்கள் பல மொழிகளில் வெளியாகி, பலதரப்பு ரசிகர்களை ஈர்த்து இருக்கிறது. அவருடைய பான் இந்தியா படங்கள், மிகப் பெரிய ஹிட்டாகி வசூலில் சாதனை படைத்துள்ளன. அவரது இயக்கத்தில் வந்த 'ஆர்ஆர்ஆர்' படம் 1,350 கோடி ரூபாய் வசூலித்தது. சில படங்களிலும், விளம்பரங்களிலும் நடித்துள்ள அவர், அடுத்து மகேஷ் பாபு நடிக்கும் பான் இந்தியா படத்தை இயக்குகிறார்.

இந்நிலையில், திரைத்துறையில் எஸ்.எஸ்.ராஜமவுலியின் பங்களிப்பை பாராட்டும் விதமாக, அப்ளாஸ் எண்டர்டெயின்மெண்ட், பிலிம் கம்பேனியன் ஸ்டுடியோஸ் சேர்ந்து 'மாடர்ன் மாஸ்டர்ஸ்' என்ற பெயரில் ஆவணப்படத்தை தயாரித்துள்ளது. இதை ராகவ் கண்ணா இயக்கியுள்ளார். இது எஸ்.எஸ்.ராஜமவுலியின் பிறந்தநாளான வரும் ஆகஸ்ட் 2ம் தேதி நெட்பிளிக்ஸ் ஓடிடி தளத்தில் வெளியாகிறது.

இதில் எஸ்.எஸ்.ராஜமவுலியின் தனிப்பட்ட வாழ்க்கை, திரையுலக வாழ்க்கை குறித்து இடம்பெறுகிறது. ஜேம்ஸ் கேமரூன், ஜோ ரஸ்ஸோ, கரண் ஜோஹர், நடிகர்கள் பிரபாஸ், ஜூனியர் என்டிஆர், ராணா டகுபதி, ராம் சரண் ஆகியோர் எஸ்.எஸ்.ராஜமவுலி குறித்து சுவாரஸ்யமான விஷயங்களைப் பகிர்ந்துகொண்டுள்ளதாக தெரிகிறது.

## புற்றுநோயாளிகளுக்கு தலைமுடியை தந்த பாடகி

புற்றுநோயாளிகளுக்காக தனது தலைமுடியை தானமாக கொடுத்திருக்கிறார் பாடகி நித்யஸ்ரீ. தமிழ், இந்தியில் பல படங்களில் பின்னணி பாடி வருகிறார் நித்யஸ்ரீ. இவர் இன்ஸ்டாகிராமில் ஆக்டிவ்வாக இருக்கிறார். இவருக்கு 1.6 மில்லியன் பாலோயர்கள் இருக்கிறார்கள். இந்நிலையில் புற்று நோயாளிகளுக்கு உதவும் வகையில் நீளமான தனது தலைமுடியை பாதியாக வெட்டியிருக்கிறார். வெட்டிய முடியை புற்றுநோய் மருத்துவமனைக்கு தந்திருக்கிறார். இவரது இந்த செயலை ரசிகர்கள் பலரும் பாராட்டி வருகிறார்கள். இதற்கு முன் தமிழகத்தை சேர்ந்த பெண் போலீஸ் ஒருவரும் இதுபோல் செய்திருந்தார். அவருக்கும் பல தரப்பிலிருந்து பாராட்டுகள் கிடைத்தது.

## 11 வருடங்களுக்குப் பிறகு ரிலீசாகும் மத கஜ ராஜா: சுந்தர்.சி, விஷால் இணைந்த முதல் படம்



பல வெற்றிப் படங்களை இயக்கியுள்ள சுந்தர்.சி, கடந்த 2013ம் ஆண்டு இயக்கி முடித்த படம், 'மத கஜ ராஜா'. ஜெமினி பிலிம் சர்கியூட் தயாரித்த இப்படத்தில் விஷால், அஞ்சலி, வரலட்சுமி, சந்தானம் நடித்தனர். ஒரு பாடலுக்கு சதா ஆடினார். சுந்தர்.சி, வெங்கட் ராகவன் இணைந்து கதை எழுதினர். ரிச்சர்ட் எம்.நாதன் ஒளிப்பதிவு செய்ய, விஜய் ஆண்டனி இசை அமைத்தார். கடந்த 2015ல் விஷால் நடித்த 'ஆம்பள' என்ற படத்தை இயக்கிய சுந்தர்.சி, கடந்த 2019ல் மீண்டும் விஷால் நடிப்பில் 'ஆக்‌ஷன்' படத்தை இயக்கினார். ஆனால், முதன்முதலில் விஷாலை வைத்து சுந்தர்.சி இயக்கிய 'மத கஜ ராஜா' என்ற படம், பல்வேறு காரணங்களால் கடந்த 11 ஆண்டுகளாக திரையிட முடியாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இப்படத்தின் பெயர், 'எம்ஜிஆர்' என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுகிறது.

இந்நிலையில், 'மத கஜ ராஜா' படம் ஏன் 11 வருடங்களாக ரிலீசாகவில்லை என்று சுந்தர்.சியிடம் கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், 'இப்படத்தை நான் இயக்கி முடித்து 11 ஆண்டுகள் ஆகிறது. இப்போது படம் திரைக்கு வந்தாலும் மிகப்பெரிய ஹிட்டாகும். நானும், விஷாலும் அப்படத்தின் தயாரிப்பு நிறுவனத்திடம் பலமுறை கேட்டுவிட்டோம். நாங்களே பணத்தை தந்து படத்தை ரிலீஸ் செய்வதாகவும் சொன்னோம். ஆனால், அப்படத்தின் தயாரிப்பு நிறுவனத்துக்கு ஏற்கனவே ஒரு படத்தால் ஏற்பட்ட இழப்பின் காரணமாக, இப்படத்தை இன்னும் வெளியிடாமல் இருக்கின்றனர்' என்று கூறியிருந்தார். இந்நிலையில், 'மத கஜ ராஜா' படம் வரும் ஆகஸ்ட் மாதம் திரைக்கு வருவதாக, ஜெமினி பிலிம் சர்கியூட் வட்டாரத்தில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது.

## ராஜ் அய்யப்பா, டெல்னா டேவிஸ் நடிக்கும் லவ் இங்க்



எம்.ஆர்பிக்சர்ஸ்சார்பில் ஏ.மகேந்திரன் ஆதிகேசவன் தயாரிக்கும் ரோம்காம் படம், 'லவ் இங்க்'. தங்களுக்கு விருப்பமான நபரின் பெயரையோ அல்லது காதல் சின்னத்தையோ டாட்டூவாக வரைவதுதான் 'லவ் இங்க்'. இதன் இன்னொரு பக்கம் குறித்து சொல்லும் கதையுடன் உருவாகும் இப்படத்தின் முதற்கட்டப் படப்பிடிப்பு இன்று தொடங்கியது. அஜித் குமாரின் 'வலிமை', அதர்வா முரளியின் '100' உள்பட சில படங்களிலும், வெப்தொடர்களிலும் நடித்துள்ள ராஜ் அய்யப்பா ஹீரோவாக நடிக்க, அவரது ஜோடியாக 'குரங்கு பொம்மை' டெல்னா டேவிஸ் நடிக்கிறார்.

இப்படத்தை எழுதி இயக்கும் மேகராஜ் தாஸ் கூறுகையில், 'பக்கத்துவீட்டு பையன் மாதிரி ஒருவரை தேடினேன். 'வலிமை' படத்தில் நடித்திருந்த ராஜ் அய்யப்பாவை பார்த்ததும், பொருத்தமாக இருப்பார் என்று தேர்வு செய்தேன். மற்றும் யோகி பாபு, திலீபன், விடிவி கணேஷ், முனீஷ்காந்த், அர்ஷத், பட்டிமன்றம் ராஜா, வினோதினி, மாறன், சுபாஷினி கண்ணன், கேபிஒய் வினோத், 'மார்க் ஆண்டனி' டிஎஸ்ஜி, மவுரிஷ் தாஸ், பிரீதா, வினோத் முன்னா நடிக்கின்றனர். ஏ.எஸ்.அர்ஜூனா ஒளிப்பதிவு செய்ய, விஷ்ணு விஜய் இசை அமைக்கிறார். சென்னை, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளில் படப்பிடிப்பு நடைபெற இருக்கிறது' என்றார்

## டைட்டானிக், அவதார் படங்களின் தயாரிப்பாளர் புற்றுநோய்க்கு பலி

உலகம் முழுக்க வெற்றிகரமாக ஓடி வசூலில் அதிக சாதனை படைத்த 'டைட்டானிக்', 'அவதார்' ஆகிய படங்களின் தயாரிப்பாளர் ஜான் லாண்டாவ் (63) புற்றுநோய்க்கு பலியானார். இந்த தகவலை அவருடைய மகன் ஜேமி லாண்டாவ் உறுதி செய்துள்ளார். ஜான் லாண்டாவ் கடந்த வெள்ளி அன்று லாஸ் ஏஞ்சல்ஸில் உயிரிழந்துள்ளார். அவர், ஹாலிவுட் இயக்குனர் ஜேம்ஸ் கேமரூனின் நீண்ட கால நண்பராவார். கடந்த 1960 ஜூலை 23ம் தேதி நியூயார்க்கில் பிறந்தவர், ஜான் லாண்டாவ்.

அவரது பெற்றோர் எலி லாண்டாவ், எடி லாண்டாவ் ஆகிய இருவரும் அமெரிக்க பிலிம் தியேட்டர் தொடங்கி படங்கள் தயாரித்தனர். பிறகு ஜான் லாண்டாவ் பாரமவுண்ட் பிக்சர்ஸ்சுடன் இணைந்து, 1987ல் 'கேம்பஸ் மேன்' என்ற ஹாலிவுட் படத்தின் மூலம் தயாரிப்பாளர்ஆனார். டிஸ்னி பிக்சர்ஸ்சுடன் இணைந்து 2 படங்கள் தயாரித்தார். தவிர, 'அவதார்' படத்தின் அடுத்தடுத்த பாகங்களை தயாரிப்பதில் தீவிரம் காட்டினார். இந்நிலையில் அவர் உயிரிழந்தது ரசிகர் களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

## யூரோ கோப்பை கால்பந்து சுவிட்சர்லாந்தை வீழ்த்தி இங்கிலாந்து அரையிறுதிக்கு தகுதி: சேம்சைடு கோலால் வெளியேறியது துருக்கி



2024 யூரோ கோப்பை கால்பந்து தொடரின் நேற்றிரவு நடந்த 3வது கால் இறுதி போட்டியில் இங்கிலாந்து மற்றும் சுவிட்சர்லாந்து அணிகள் மோதின. பரபரப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் முதல் பாதியில் 2 அணிகளும் கோல் அடிக்கவில்லை. 2வது பாதியில் 75வது நிமிடத்தில் சுவிட்சர்லாந்து அணி முதல் கோல் அடித்தது. அடுத்து 80வது நிமிடத்தில் அதற்கு பதிலடி கொடுத்து இங்கிலாந்து அணி கோல் அடித்தது. ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் 1 – 1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் இருந்தன. இதையடுத்து கூடுதல் நேரத்திலும், 2 அணிகளும் ஒரு கோல் கூட அடிக்கவில்லை. இதைத்தொடர்ந்து போட்டி சூட் அவுட்க்கு சென்றது. அதில் இங்கிலாந்து 5 – 3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரை இறுதிக்கு முன்னேறியது.

இதுபோல் இன்று காலை நடந்த மற்றொரு 4வது கால் இறுதி போட்டியில் நெதர்லாந்து மற்றும் துருக்கி அணிகள் மோதின. இந்த போட்டியில் 35வது நிமிடத்தில் துருக்கி வீரர் அக்காய்தின் அந்த அணிக்கு முதல் கோலை அடித்தார். 55வது நிமிடத்தில் அந்த அணிக்கு ஃப்ரீ கிக் வாய்ப்பு கிடைத்தது. அதில் குல்லர் அடித்த பந்து கோல் போஸ்ட்டில் பட்டு வெளியே சென்றது. இதனால், எளிதாக கிடைக்க வேண்டிய கோல் வாய்ப்பு நழுவியது. அடுத்து 70வது நிமிடத்தில் நெதர்லாந்து அணி ஒரு கோல் அடித்து போட்டியை சமநிலைக்கு கொண்டு வந்தது.

அதன் பின் 76வது நிமிடத்தில் துருக்கி வீரர் முல்டூர் பதற்றத்தில் துருக்கியின் கோல் பகுதியிலேயே கோல் (சேம்சைடு) அடித்தார். இதையடுத்து நெதர்லாந்து 2 – 1 என முன்னிலை பெற்றது. ஆட்டநேர முடிவு வரை துருக்கி அணியால் கோல் அடிக்க முடியவில்லை. இதனால் துருக்கி தோல்வி அடைந்தது. நெதர்லாந்து அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

இதையடுத்து வரும் 10ம் தேதி நடைபெறும் முதலாவது அரையிறுதி போட்டியில் ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ் அணிகளும், 11ம் தேதி நடைபெறும் 2வது அரையிறுதி போட்டியில் நெதர்லாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளும் மோத உள்ளன.

## 13 ரன் வித்தியாசத்தில் ஜிம்பாப்வே அணியிடம் இந்தியா அதிர்ச்சி தோல்வி

ஜிம்பாப்வே அணியுடனான முதல் டி20 போட்டியில், இந்தியா 13 ரன் வித்தியாசத்தில் அதிர்ச்சி தோல்வியைத் தழுவியது. ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சுப்மன் கில் தலைமையிலான இந்திய அணி, மொத்தம் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடுகிறது. இந்த தொடரில், உலக கோப்பையில் விளையாடிய சீனியர் வீரர்களுக்கு ஓய்வளிக்கப்பட்டு, இளம் வீரர்கள் அடங்கிய இந்திய அணி தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஹராரே ஸ்போர்ட்ஸ் கிளப் மைதானத்தில் நேற்று நடந்த முதல் போட்டியில், டாஸ் வென்ற இந்திய அணி கேப்டன் கில் முதலில் பந்துவீச முடிவு செய்தார். இந்திய அணியில் ரியான் பராக், அபிஷேக் ஷர்மா, துருவ் ஜூரெல் அறிமுகமாகினர்.

வெஸ்லி, இன்னொசென்ட் இணைந்து ஜிம்பாப்வே இன்னிங்சை தொடங்கினர். இன்னொசென்ட் கோல்டன் டக் அவுட்டாகி வெளியேற அந்த அணிக்கு அதிர்ச்சி தொடக்கமாக அமைந்தது. பிரையன் பென்னட் 22, வெஸ்லி 21, கேப்டன் சிக்கந்தர் 17 ரன்னில் பெவிலியன் திரும்பினர். டியான் கிளைவ் பொறுப்புடன் விளையாடி ஸ்கோரை உயர்த்தினர். டியான் 23 ரன் எடுத்து ஆட்டமிழக்க, மற்ற வீரர்கள் சொற்ப ரன்னில் அணிவகுத்தனர். ஜிம்பாப்வே 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 115 ரன் எடுத்தது. கிளைவ் 29 ரன், சதாரா (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்திய பந்துவீச்சில் பிஷ்னோய் 4 (42, வாஷிங்டன் 2, முகேஷ், ஆவேஷ் தலா 1 விக்கெட் வீழ்த்தினர். இதைத் தொடர்ந்து, 20 ஓவரில் 116 ரன் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் இந்தியா களமிறங்கியது. அபிஷேக், கில் இணைந்து துரத்தலை தொடங்கினர். அபிஷேக் டக் அவுட்டாகி ஏமாற்றமளித்தார். ஒரு முனையில் கில் உறுதியுடன் போராட, சக வீரர்கள் ஒற்றை இலக்க ரன்னில் உள்ளேஞ் வெளியே விளையாடினர். கில் 31 ரன் (29 பந்து, 5 பவுண்டரி) விளாசி சிக்கந்தர் பந்துவீச்சில் கிளீன் போல்டாக, இந்தியா 10.2 ஓவரில் 47 ரன்னுக்கு 6 விக்கெட் இழந்து திணறியது. பிஷ்னோய் 9 ரன்னில் வெளியேறினார். கடைசி கட்டத்தில் வாஷிங்டன் ஆவேஷ் கடுமையாக முயற்சிக்க இந்திய அணிக்கு சற்று நம்பிக்கை பிறந்தது. ஆவேஷ் 16, முகேஷ் (0) அடுத்தடுத்து ஆட்டமிழக்க, கடைசி 2 ஓவரில் 18 ரன் தேவைப்பட்ட நிலையில், முஸரபானி 19வது ஓவரில் 2 ரன் மட்டுமே விட்டுக்கொடுத்து நெருக்கடியை ஏற்படுத்தினார். இதனால் கடைசி ஓவரில் வெற்றிக்கு 16 ரன் தேவைப்பட, சதாரா பந்துவீச்சில் பவுண்டரி, சிக்சர் விளாச முடியாமல் சிரமப்பட்ட வாஷிங்டன் 27 ரன் எடுத்து (34 பந்து, 1 பவுண்டரி, 1 சிக்சர்) விக்கெட்டை இழந்தார். இந்தியா 19.5 ஓவரில் 102 ரன் மட்டுமே எடுத்து 13 ரன் வித்தியாசத்தில் அதிர்ச்சி தோல்வியைத் தழுவியது. கலீல் (0) ஆட்டமிழக்காமல் இருந்தார். ஜிம்பாப்வே பந்துவீச்சில் கேப்டன் சிக்கந்தர், சதாரா தலா 3, பென்னட், மசகட்சா, முஸரபானி, ஜாங்வே தலா 1 விக்கெட் வீழ்த்தினர். சிக்கந்தர் ஆட்ட நாயகன் விருது பெற்றார். ஜிம்பாப்வே 10 என முன்னிலை வகிக்க, 2வது போட்டி இன்று மாலை 4.30க்கு தொடங்கி நடைபெற உள்ளது.

## ஜிம்பாவேயுடன் 2வது டி20: 100 ரன் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி: அபிஷேக் அதிரடி சதம்



ஜிம்பாப்வே அணியுடனான 2வது டி20 போட்டியில், இந்தியா 100 ரன் வித்தியாசத்தில் அபாரமாக வென்று பதிலடி கொடுத்தது. தொடக்க வீரர் அபிஷேக் ஷர்மா அதிரடியாக சதம் விளாசி அசத்தினார். ஹராரே ஸ்போர்ட்ஸ் கிளப் மைதானத்தில் நேற்று நடந்த இப்போட்டியில், டாஸ் வென்ற இந்திய அணி கேப்டன் ஷுப்மன் கில் முதலில் பேட் செய்ய முடிவு செய்தார். இந்திய அணியில் சாய் சுதர்சன் அறிமுகமானார். கில், அபிஷேக் இணைந்து இந்திய இன்னிங்சை தொடங்கினர். கில் 2 ரன்மட்டுமேஎடுத்துமுஸரபானிபந்துவீச்சில் பென்னட் வசம் பிடிபட, இந்திய அணிக்கு அதிர்ச்சி தொடக்கமாக அமைந்தது.

அடுத்து அபிஷேக் உடன் ருதுராஜ் கெய்க்வாட் இணைந்தார். இருவரும் அதிரடியில் இறங்க, இந்திய ஸ்கோர் வேகம் எடுத்தது. டியான் மையர்ஸ் வீசிய 11வது ஓவரில் 3 பவுண்டரி, 2 சிக்சர் விளாசி துவம்சம் செய்த அபிஷேக் 33 பந்தில் அரை சதம் அடித்தார். அதன் பிறகு ஒரேயடியாக டாப் கியருக்கு தாவிய அவர் 47 பந்தில் சதத்தை நிறைவு செய்து சாதனை படைத்தார். அபிஷேக் 100 ரன் (47 பந்து, 7 பவுண்டரி, 8 சிக்சர்) விளாசி மசகட்சா பந்துவீச்சில் மையர்ஸ் வசம் கேட்ச் கொடுத்து ஆட்டமிழந்தார். அபிஷேக் – ருதுராஜ் ஜோடி 2வது விக்கெட்டுக்கு 137 ரன் சேர்த்தது குறிப்பிடத்தக்கது. அதன் பிறகு ருதுராஜ் – ரிங்கு சிங் ஜோடி அதிரடியைத் தொடர, இந்தியா 20 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 234 ரன் குவித்தது. ருதுராஜ் 77 ரன் (47 பந்து, 11 பவுண்டரி, 1 சிக்சர்), ரிங்கு 48 ரன்னுடன் (22 பந்து, 2 பவுண்டரி, 5 சிக்சர்) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இதையடுத்து, 20 ஓவரில் 235 ரன் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் களமிறங்கிய ஜிம்பாப்வே அணி, 18.4 ஓவரில் 134 ரன் மட்டுமே சேர்த்து ஆல் அவுட்டானது. அதிகபட்சமாக வெஸ்லி 43 ரன் (39 பந்து, 3 பவுண்டரி, 1 சிக்சர்), லூக் ஜாங்வே 33, பிரையன் பென்னட் 26 ரன் (9 பந்து, 1 பவுண்டரி, 3 சிக்சர்) விளாச, மற்ற வீரர்கள் சொற்ப ரன்னில் ஆட்டமிழந்து அணிவகுத்தனர். இந்திய பந்துவீச்சில் ஆவேஷ் கான், முகேஷ் குமார் தலா 3 விக்கெட், ரவி பிஷ்னோய் 2, வாஷிங்டன் 1 விக்கெட் வீழ்த்தினர். முதல் போட்டியில் 13 ரன் வித்தியாசத்தில் போராடித் தோற்ற இந்தியா, நேற்று 100 ரன் வித்தியாசத்தில் அபாரமாக வென்று பதிலடி கொடுத்தது. அபிஷேக் ஆட்ட நாயகன் விருது பெற்றார். இரு அணிகளும் 11 என சமநிலை வகிக்க, 3வது போட்டி நாளை நடக்கிறது.





பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்

**விளக்கம்:**

மயக்கத்திலிருந்து தெளிந்த மாசற்ற அறிவை உடையவர், பயன் நீங்கிய சொற்களை ஒருகால் மறந்தும் சொல்லமாட்டார்.

**நமது தினகனி**
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.